10.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

STC. 2524/2021

PROSECUTION WITNESS L.W.9/P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | இம்தியாஸ் அகமதுகான் | Caste | : |
| Father's Name | : | மகபூப்கான் | Calling | : |
| Husband’s Name | : | | | |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**எதிரி ஆஜர் இல்லை.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 14.10.2024

முதல் விசாரணை

1) நான் தற்போது ஈரோடு நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 2021 ம் வருடம் கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணியிலிருந்தபோது 18.02.2021 ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது ஈரோடு பால முருகன் மருத்துவமனையிலிருந்த கிடைத்த லட்சுமணன் என்பவரின் RTI இன்டிமேசன் பேரில் மருத்துவமனை சென்று உள்நோயாளியாக இருந்த லட்சுமணன் என்பவரிடம் விசாரிக்க அவர் தனது உறவினர்களுடன் கலந்து பேசி, வழக்கு கொடுப்பதாக சொன்னார். காவல்நிலையம் வந்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்து, மீண்டும் 20.02.2021 ம் தேதி, பால முருகன் மருத்துவமனை சென்று உள்நோயாளியாக இருந்த லட்சுமணன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து படித்து காண்பித்தேன்.

3) வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து கருங்கல்பாளையநிலைய குற்ற எண். 108/2021 சட்டபிரிவு 279, 337 இதச வழக்காக பதிவு செய்தேன். **(20.02.2021 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) அசல் புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் எண். 1 க்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் விசாரணைக்கு அவரது பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) 18.02.2021 ம் தேதி அ.சா.1 நல்ல நிலைமையில் இருந்தார் என்றாலும், அவர் உறவினரிடம் கேட்டு விட்டு புகார் அளிக்கிறேன் என்று கூறினார் என்றாலும் சரிதான்.

**2** ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை வாய்ப்பளித்தும் இல்லை**.**